இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 343 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 07 – செவ்வாய்க்கிழமை 23 ஜுலை 2024 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 343 : Thiruvalluvar Year - 2055 - Aadi 07 - Tuesday 23 July 2024 - Kovai ★ ★ 8 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# திராவிட மாடல் ஆட்சியில் பேரூராட்சிகளின் பிரமாண்டமான வளர்ச்சி!

## ரூ.5626.74 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகள்!

சென்னை, ஜூலை 23 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் பேரூராட்சிகளின் பிரமாண்டமான வளர்ச்சி அடைந்துள்ளன. ரூ.2,391.72 கோடியில் பேரூராட்சிகளின் மேம்பாட்டுத் திட்டம் என்றும், ரூ.1,414 கோடியில் பல்வேறு சாலை திட்டங்கள் என்றும், ரூ.1,412 கோடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் என்றும், ரூ.201.65 கோடியில் பேருந்து நிலையங்கள் சந்தைகள் என்றும், ரூ.155.56 கோடியில் எல்.இ.டி தெரு விளக்குகள் என்றும், ரூ.51.81 கோடியில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் என்றும் நகரமயமாதலில் பேரூராட்சிகளின் பங்கு மகத்தானதாகும்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

மனித உடலின் சீரான இயக்கத்திற்கு உதவிட எலும்புகள், நரம்புகள், இரத்தக் குழாய்கள் அனைத்தும் உடல் முழுவதும் பரவியுள்ளதுபோல், அரசுத் திட்டங்களின் பயன்களை மக்கள் அனைவருக்கும் கொண்டுசென்று சேர்ப்பதில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாநகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் முதலான உள்ளாட்சி அமைப்புகள்தான் பெரிதும் உதவுகின்றன.

தமிழ்நாட்டில் சென்னை மாநகராட்சி உட்பட மொத்தம் 25 மாநகராட்சிகள் , 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் உள்ளன.

இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதல் முறையாக நகராட்சிகளுக்கும் கிராம ஊராட்சிகளுக்கும் இடைப்பட்ட நிலையில் பேரூராட்சி அமைப்புகள் எனும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்கள் 5.1.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 204 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 1,335 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவிலும் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில் முதலிட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பேரூராட்சிகள் என்பவை தமிழ்நாடு முழுவதும் உள்ள நடுத்தர மற்றும் சிறு நகரங்கள் ஆகும். இந்த நகரங்கள் பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்குகின்றன. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பணி செய்வது பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் உறுதுணையாக இருக்கும். எனவே, பேரூராட்சிகளின் வளர்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பல பேரூராட்சிகள், கோவில்கள் மற்றும் பாரம்பரிய இடங்களைக் கொண்ட சுற்றுலா மையங்களாகப் பல ஆண்டுகளாக விளங்கி வருகின்றன.

மொத்த பரப்பளவு 5,983.50 சதுர கி.மீ. கொண்ட 490 பேரூராட்சிகளின் தற்போதைய மக்கள் தொகை 78,87,523 ஆகும்.

பேரூராட்சிகள் நிர்வாகம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முனைப்புடனும் செயல்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகைக்கு இந்த முயற்சிகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

மக்களுக்குத் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் பேரூராட்சிகள் துறையில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நபார்டு திட்டத்தின்கீழ்**

நபார்டு திட்டத்தின்கீழ், 2021 முதல் கடந்த மூன்றாண்டுகளில் 602 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 515 சாலைப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன; 11 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ்**

தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், 812 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1583 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1178 சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன.

**மாநில நகர்ப்புறச் சாலை மேம்பாட்டு நிதியின்கீழ்**

10.469 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 137.57 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண்சாலைகளைத் தார்ச் சாலைகளாக, சிமெண்ட் கான்கிரீட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**மூலதன மானிய நிதி திட்டத்தின்கீழ்**

மூலதன மானிய நிதி திட்டத்தின்கீழ், 569.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 355 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தின்கீழ் 210.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 668 பணிகள் நடைபெற்றுள்ளன.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

---

## ஒன்றிய அரசு தாக்கல் செய்யும் பட்ஜெட்டில்

# தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 23 -

ஒன்றிய அரசு தாக்கல் செய்ய உள்ள 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் தமிழ்நாடு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாளை (24.07.2024) 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. அதில், தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ்நாட்டு மக்களின் முக்கிய தேவைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-



நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட் 2024-இல்

- **மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப் படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான நிதி**
- **தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல்**
- **பத்தாண்டுகளாக வருமான வரிச் சுமை குறைக்கப்படும் என்ற நடுத்தரக் குடும்பங்களின் எதிர்பார்ப்பு**
- **கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களு க்கான ஒப்புதல்**
- **தமிழ்நாட்டில் ஏற்கெனவே அறிவிக் கப்பட்டுள்ள மற்றும் புதிய ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திடப் போதிய நிதி ஒதுக்கீடு**
- **கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல்**

உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவு செய்யும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வலை தளப் பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

---

## காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு:

# மேட்டூர் அணை நீர்மட்டம் - ஒரே நாளில் 7 அடி உயர்வு!

சேலம், ஜூலை 23-

கர்நாடகாவில் தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள நீர்நிலை களில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கடலோர மாவட்டங்கள் மற்றும் மலை மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழையின் காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. குடகு மாவட்டத்தில் தயார் நிலையில் பேரிடர் மீட்பு குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பல்வேறு ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் காவிரி மற்றும் பல்வேறு ஆறுகளின் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்து காணப்படுவதால் தமிழக எல்லையான பிலிகுண்டு பகுதிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இந்த தண்ணீர் நேரமாக காவிரி ஆற்றில் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.

காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7.6 அடி உயர்ந்துள்ளது. ஒரே வாரத்தில் 26.15 அடி உயர்ந்துள்ளது. நீர் வரத்து வினாடிக்கு 68,843 கன அடியாக இருந்த நிலையில், நேற்று முன்தினம் காலை நிலவரப்படி 71,777 கன அடியாக நீர் வந்து கொண்டிருக்கிறது.

---

# தமிழ்நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக் கூறும் அகழாய்வு!

## தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அகழாய்வு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!


சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழாய்வு குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள பதிவை மேற்கோளிட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “தமிழரின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக் கூற நாம் மேற்கொண்டுள்ள பயணம் சரியான திசையில் செல்வதை, இந்த அகழாய்வுகள் உறுதி செய்கின்றன!” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

**தடைகளைக் கடந்து தரவுகளைச் சேகரிக்கிறோம்!**

**மூடியுடன் பானை, பாசிமணிகள், சுடுமண் கிண்ணங்கள் தொட்டி, உறை கிணறு, வெள்ளியிலான முத்திரைக் காசு, சிவப்பு வண்ணக் கொள்கலன், தமிழிபானை ஓடு, இரும்பிலான ஏர்க் கலப்பையின் கொழுமுனை, தக்களி, தந்தத்தாலான பகடைக்காய், சுடுமண் சிற்பம், உணவுக் கிண்ணம், செம்பினாலான அஞ்சனக்கோல் - ஆணி என இப்படித் தொடர்ந்து அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் பொருட்கள், தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவியல் சான்றுகளுடன் உலகுக்கு எடுத்துக்கூற நாம் மேற்கொண்டுள்ள பயணம் சரியான திசையில் செல்வதை உறுதி செய்கிறது!**



**இந்தியத் துணைக்கண்ட வரலாறு தெற்கிலிருந்து தொடங்கி எழுதப்பட வேண்டும் என்ற நம் முழக்கம் மெய்ப்படப் பணிகளைத் தொடர்வோம்!**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.